# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.98/2018 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா–01 (PW–01) |
| **பெயர்** | :– | மகேஸ்வரி |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜுன்திங்கள் 23 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினர். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கோயமுத்தூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பிரிவில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 10.02.2006 ஆம் தேதியன்று சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில் கருப்பூர் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கருப்பூர் வருவாய் கிராம எல்லைக்குட்பட்ட கோட்டகவுண்டம்பட்டி, புளியம்பட்டி ஊரில் நாரணம்பாளையம் பிரிவு சாலையில் உள்ள அரசு புறம்போக்கு குன்று வகைபாடு உள்ள இடத்தில் சட்டவிரோதமாக வெடிமருந்து வைத்து கல் உடைப்பதாக புகார் வந்திருப்பதாகவும் அதனால் திடீர் தணிக்கை மேற்கொள்ள அந்த இடத்திற்கு செல்லவேண்டும் என்றும் ஓமலூர் வட்டாட்சியர் பகல் 11.00 மணிக்கு தொலைபேசியில் தகவல் சொன்னார். நான் அந்த தகவலை கோட்டகவுண்டம் பட்டி கிராமநிருவாக அலுவலருக்கும் கிராம உதவியாளருக்கும் தகவல் சொன்னேன்.

வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், நான், அலுவலக உதவியாளர் ஆகியோர் வட்டாட்சியரின் வாகனத்தில் புளியம்பட்டிக்கு சென்றோம். அங்கு கிராமநிருவாக அலுவலரும் உதவியாளரும் வந்தனர். அனைவரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு குழி தோண்டும் எந்திரம் வைத்து ஓட்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வாகனத்தின் பதிவு எண்.TN.27-Y-9100 ஆகும். அங்கு ஒருவர் மட்டும் இருந்தார். அவர் பெயர் பெருமாள். அவர்தான் துளை போட்டுக்கொண்டிருந்தார். அவர் மேற்சொன்ன எந்திரத்தை இயக்குபவர் என்று சொன்னார். அந்த எந்திரம் சக்கரைசெட்டிபட்டி ஊராட்சி மன்றத்தின் தலைவராக அப்போது இருந்த கோவிந்தனுக்கு சொந்தமானது என்று தெரியவந்தது. அந்த எந்திரத்தை வைத்து கல் உடைத்து விற்றவர் பழனிசாமி என்று தெரியவந்தது.

அங்கு 4 பொட்டலங்கள் வெடிமருந்து இருந்தது. வெடிதோட்டா 16 இருந்தது. அந்த எந்திரம், வெடிமருந்து பொட்டலங்கள், தோட்டா ஆகியவற்றை வட்டாட்சியர் கைப்பற்றினார். அனைத்தையும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எடுத்து சென்றோம். அது சம்மந்தமாக அறிக்கை தயாரித்து மறுநாள் 11 ஆம் தேதி காவல் நிலையத்திற்கு சட்ட நடவடிக்கை எடுக்க அனுப்பினார். என்னிடம் காட்டப்படும் புகார்தான் அது. அதிலுள்ள கையொப்பம் வட்டாட்சியருடையது. அவர் தற்போது உயிரோடு இல்லை. அவருடன் நான் பணிபுரிந்ததால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். இந்த நடவடிக்கை முழுக்க நானும் வட்டாட்சியருடன் இருந்தேன். புகார் **அ.சா.ஆ–01 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

13.02.2006 ஆம் தேதியன்று காவல் துறையினர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து எங்களை விசாரித்தார். வட்டாட்சியர் மாதையன், மண்டல துணை வட்டாட்சியர் சந்துரு, வட்டாட்சியர் அலுவலக இளநிலை உதவியாளர் ராஜரத்தினம், கிராம நிருவாக அலுவலகர் மனோகரன் ஆகியோர் இறந்துவிட்டனர்.

**குறுக்கு விசாரணை**

நிலத்தின் வகைபாடு குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். அரசு புறம்போக்கு நிலத்தில் குன்று இருந்தால் அரசு புறம்போக்கு குன்று என்று வகைபாடு செய்யப்படும் என்றால் சரிதான். வட்டாட்சியருக்கு யார் தகவல் சொன்னது என்று எனக்கு தெரியாது. வட்டாட்சியர் அழைத்ததால் சென்றேன்.

எங்கள் எல்லைக்கு உட்பட்ட இடத்தில் சுப்புரு என்பவர் சல்லி அரைக்கும் தொழிற்சாலை வைத்திருந்தார் என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. அங்கு கோபால் என்பவர் சல்லி அரைக்கும் தொழிற்சாலை வைத்திருந்தார் என்றால் எனக்கு நினைவில்லை. அந்த பகுதியில் அரசு உரிமம் பெற்ற சல்லி அரைக்கும்

தொழிற்சாலை இருந்தன. நான் சொல்லும் குன்றுக்கு தென்புறம் KMB சகோதர்களுக்கு சொந்தமான நிலம் உள்ளது என்று சொன்னால் எனக்கு நினைவில்லை. அந்த பகுதியில் KMB சகோதர்களுக்கு சொந்தமான சல்லி அரைக்கும் ஆலை இருந்தது. அவர்கள் இடத்தில் கருங்கல் குன்று இருந்தது என்றும் அந்த குன்றும் நாங்கள் சொல்லும் குன்றும் சேர்ந்தார்போன்று இருந்தன என்றும் சொன்னால் சரியல்ல.

சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் நாராயணம்பாளையம் பிரிவு உள்ளது என்றால் சரிதான். அந்த வழியாக பல ஊர்களுக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து 500 மீட்டர் தூரத்தில் தேசிய நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில்

LSP எ ன்ற எண்ணெய் ஆலை இருந்ததா என்றால் இல்லை. ஆனால் அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலை இருந்தது. அதன் பெயர் East India mining company இருந்ததா என்றால் East India பெயரில் ஒரு நிறுவனம் இருந்தது. நாங்கள் சென்றபோது அந்த தொழிற்சாலை செயல்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் இடத்தில் முனியப்பன் கோவில் ஒன்று உள்ளது என்றால் எனக்கு தற்போது நினைவில்லை. அந்த பகுதியில் பனைமரம் இருந்தது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு வடக்கு பக்கம் குப்பங்காடு ஊருக்கு செல்லும் சாலை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. அங்கிருந்த பொதுமக்களை வட்டாட்சியர் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். அது சாலை என்பதால் அந்த வழியாக சென்றவர்களை விசாரித்தார். சுமார் 4 அல்லது 5 பேரை விசாரித்தார்.

குவாரி நடத்த பழனிசாமி உரிமம் பெற்றிருந்தாரா என்றால் சுரங்க அலுவலகத்தில் விசாரித்தோம். அவர் உரிமம் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னார்கள். எங்களுடைய பதிவேட்டிலும் இல்லை. நாங்கள் கைபேசி மூலமாகத்தான் விசாரித்தோம்.

அந்த இடத்திலிருந்து பொது மக்கள் வீடு கட்டுவதற்கு கல் வெட்டி எடுத்து செல்வது வழக்கம் என்றால் இல்லை. KNB நிறுவனத்தினர் அருகில் சல்லி அரைக்கும் ஆலை வைத்திருந்ததால் அவர்கள்தான் நான் சொல்லும் குன்றிலிருந்து கல் வெட்டினார்கள் என்றால் சரிதான். எத்தனை குழி இருந்தது என்று நான் எண்ணவில்லை. எவ்வளவு பரப்பளவில் வெட்டப்பட்டிருந்தது என்று நான் அளக்கவில்லை. வெட்டப்பட்ட கற்களின் மதிப்பு எவ்வளவு என்று நான் கணக்கிடவில்லை. அதற்கான நடவடிக்கையை வட்டாட்சியர் எடுத்திருப்பார். நான் எடுக்கவில்லை.

வெடிபொருளை கையாள நான் நிபுணர் அல்ல என்றால் சரிதான். வெடிகுண்டு நிபுணருக்கு நாங்கள் தகவல் அனுப்பினோமா என்றால் வட்டாட்சியர் மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பினார். நாங்கள் தனியாக சொல்லவில்லை. புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் அங்கு நின்ற எந்திரத்தின் பதிவு எண் பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன். பெருமாள் அந்த இடத்தில் 5 அல்லது 6 குழி போட்டார் என்று சொன்னேனா என்றால் குழி போட்டார் என்று சொன்னேன். குழி போட்டுக் கொண்டிருந்தார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

வட்டாட்சியர் அலுவலகமும் காவல் நிலையமும் ஒரே வளாகத்தில் உள்ளன என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களை கைப்பற்றிய நடவடிக்கைகளில் நான் கையொப்பம் எதுவும் போடவில்லை. என்னென்ன பொருள் கைப்பற்றி ஒப்படைக்கப்பட்டது என்று நான் அறிக்கை அளித்தேன். அது சம்மந்தமாக புலனாய்வின்போது சொன்னேனா என்றால் எனக்கு நினைவில்லை. எனக்கு தகவல் வந்ததும் நான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்றேன். அப்போதே காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தோமா என்றால் இல்லை. 11 ஆம் தேதியன்று மதியம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. வட்டாட்சியர் மட்டும் கையொப்பமிட்டு கொடுத்தார் என்றால் சரிதான்.

நான் சொல்வது போன்று அந்த இடத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் 2 ஆம் எதிரியின் துளையிடும் வாகனமோ 3 ஆம் எதிரியோ அங்கு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால்தான் எத்தனை குழிகள் இருந்தன, எவ்வளவு பரப்பளவில் வெட்டப்பட்டிருந்தது போன்ற விவரங்களை என்னால் சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாகனத்தை எப்போது காவல் துறையினரிடம் ஒப்படைத்தோம் என்றால் பல நாட்களாக அது வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தது. எப்போது ஒப்படைத்தனர் என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் அந்த வாகனத்தை கைப்பற்றியிருந்தால் காவல் நிலையத்தில் உடனே ஒப்படைத்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழியாகதான் 2 ஆம் எதிரியின் வாகனம் செல்ல வேண்டுமென்றும் அவ்வாறு சென்றபோது நாங்கள் பிடித்து பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. புகார் 11 ஆம் தேதியன்று கொடுக்கப்படவில்லை என்றும் 12 ஆம் தேதியன்று இரவு 10.30 மணிக்குதான் புகார் கொடுக்கப்பட்டது என்றும் எனக்கு எதுவும் தெரியாமல் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சம்பவத்திற்கும் 2, 3 ஆம் எதிரிக்களுக்கும் சம்மந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிரி பற்றி 2, 3 ஆம் எதிரிகளுக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. இந்த எதிரிகளுக்கும் 1 ஆம் எதிரிக்கும் எப்போதும் எவ்வித தொடர்பும் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.